# இரும்பின் குரல்

AMMAN-TRY


இது ஒரு **AMMAN - TRY**-யின் முயற்சி

திருச்சி | அக்டோபர் 2020 | 8 பக்கம் | இலவசம் | மலர் 1 | இதழ் 1

**AMMAN-TRY**
TMT BARS

CORONA

SAFEGUARDS FROM




நாம் அனைவரும் ஒன்றாக இருக்கிறோம் இந்த வைரஸுக்கு எதிராக

உலகமே மெதுவாக செயல்படும் இந்த நேரங்கள் எவ்வளவு கடினமானவை மற்றும் நிச்சயமற்றவை என்பதை நாம் அறிவோம். அதனால் முகக்கவசம் முகத்திலும், சமூக இடைவெளியை கடைபிடிப்பதிலும் மனித இனம் வைரஸை எதிர்த்துப் போராடுகிறது என்பதை நினைவில் கொள்வோம்.

# MD'S DESK



*அன்புள்ள வாசகர்களே*

உங்களுக்கு தெரிந்தபடி, AMMAN-TRY அதன் வணிகத்தின் தொடக்கத்திலிருந்து பல புதிய அறிமுகம் மற்றும் செயல்படுத்துதலுடன், தொழிற்துறையில் ஒரு முன்னோடியாக இருந்து வருகிறது. இதன் அடிப்படையில் எங்கள் பங்குதாரர்கள் அனைவருக்கும் செய்திமடலை அறிமுகப் படுத்துவதில் AMMAN-TRY மகிழ்ச்சியடைகிறது.

இது தொடக்கத்தில் காலாண்டு பதிப்பாக இருக்கும். மேலும் எதிர்காலத்தில் இதனை மாத பதிப்பாக அதிகரிக்க நாங்கள் பணியாற்றுவோம். இந்த செய்திமடல் AMMAN-TRY–யால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள் / செயல்பாடுகள் எஃகு தொழில் தொடர்பான புதுப்பிப்புகள், பொது கட்டுமான உதவிக்குறிப்புகள், சமூக ஊடகங்களில் ஃபிளையர்கள் மற்றும் எங்கள் தொடர்புக்கான கருத்து படிவம் பற்றிய தகவல்களைக் கொண்டு செல்லும்.

எங்களது அனைத்து முயற்சிகளுக்கும் ஆதரவு அளித்துவரும் நீங்கள் இந்த செய்திமடல் முயற்சிக்கும் தேவையான ஆதரவை தருவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

நன்றி..
**M. சோமசுந்தரம்**

AMMAN-TRY
TMT BARS

# கொரோனா வைரஸ் காலத்தில் AMMAN-TRY ன் பங்களிப்பு

எல்லா நேரங்களிலும் எங்களை ஆதரிக்கும் எங்கள் மக்களுக்கு சிறந்ததை வழங்குவதை நாங்கள் எப்பொழுதும் உறுதி செய்கிறோம். கொடிய வைரஸுக்கு எதிராக போராட நாங்கள் மக்களுடன் கை கோர்த்துள்ளோம்.

நாம் உடல் ரீதியாக தொலைவில் இருந்தாலும், நமது ஒற்றுமையைக் காட்ட வேண்டிய நேரம் இது.

நாம் அனைவரும் சமம், அனைவருக்கும் அத்தியாவசியப் பொருட்கள் தேவைப்படும் என்பதை நாம் அறிந்ததே. எனவே, மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களை நாம் வழங்கினோம். பொருட்கள் வழங்கும்போது எங்கள் ஊழியர்கள் முகக்கவசம் அணிந்தும், சமூக இடைவெளியையும் பின்பற்றினார்கள். இது முக்கியமான நேரம், கொடிய வைரஸை எதிர்த்துப்போராட நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒன்றாக நிற்போம்.







## ஒருங்கிணைவோம் ஒன்றுபடுவோம்

நம்மைச் சுற்றியுள்ளவர்களை கவனித்துக்கொள்வது எங்கள் கடமை என்பதை நாங்கள் நன்கு அறிவோம், அதன் ஒரு பகுதியாக எங்கள் தொழிற்சாலைகளுக்கு அருகிலுள்ள கிராம மக்களுக்கு இந்த ஊரடங்கின் போது 22,000 கிலோ அரிசி பைகள், 1600 கிலோ பருப்பு, 4000 லிட்டர் எண்ணெய் மற்றும் 50,000க்கும் மேல் முகக்கவசங்களை விநியோகித்துள்ளோம்.

**இது செயல்பட வேண்டிய தருணம் !**





# கிருமி நாசினி சுரங்கம்

கடுமையான நேரங்கள் கடுமையான நடவடிக்கைகளுக்கு அழைப்பு விடுக்கின்றன என்பது வெளிப்படையானது. இந்த சுரங்கம் கிருமிகளை அடக்குவதற்கும், ஒழிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. வைரஸ் பரவுவதைக் குறைப்பதில் முக்கிய பங்கும் இதற்கு உள்ளது.

ஒரு சில பகுதிகள் மீண்டும் வணிகங்களைத் தொடங்குகையில், மிக ஆபத்தான நோய் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியமென கருதி மக்களுக்கு உதவும் வகையில் நாங்கள் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியுடன் கைகோர்த்தோம். மேலும், கும்பகோணம் மற்றும் சீர்காழி நகரங்களிலும் இந்த சேவையை செய்தோம்.

மேலும், இனாம்குளத்தூர் மற்றும் நாகமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், ஸ்ரீரங்கம் மாவட்ட வட்டாட்சியர் அலுவலகத்திற்கும் எங்களின் நிறுவனம் சார்பாக கை கழுவும் பேசின் (Wash basin) வழங்கப்பட்டது.







## கொரோனாவை எதிர்கொள்ளும்

### ஆரோக்கியமான எளிய வழிமுறைகள்

ஆரோக்கியம் என்ற சொல் எப்போதும் உடல் ஆரோக்கியத்தை மட்டுமே குறிப்பது அல்ல, மன ஆரோக்கியத்தையும் குறிக்கும், கொடிய கொரோனா வைரஸைப் பற்றி எல்லோரும் பேசும் இச்சூழலில் நம் மனதை உறுதியாகவும் அமைதியாகவும் பார்த்து கொள்வது அவசியம், உங்கள் மனதை அமைதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க சில வழிகள்.

ஆரோக்கியமான உணவை உண்ணுங்கள். போதுமான அளவு தூக்கம் அவசியம், உடற்பயிற்சி அல்லது யோகா செய்யுங்கள். ஆழ்ந்த சுவாசம் மற்றும் தியானம் முயற்சிக்கவும், அதிக செய்திகளைப் பார்ப்பது அல்லது சமூக ஊடகங்களில் அதிக நேரம் செலவிடுவதைத் தவிர்க்கவும். தொலைபேசி அல்லது வீடியோ அழைப்புகள் மூலம் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் இணையுங்கள்.




AMMAN-TRY
TMT BARS

# இந்திய இரும்பு துறையின் வரலாறு

**வரலாற்று மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி உலோகங்களைப் பயன்படுத்துவதில் இந்தியா முதல் நாடாக இருந்தது.**





இரும்பு மற்றும் எஃகு தொழிற்துறையானது இந்தியாவின் மிகப்பெரிய துறைகளில் ஒன்றாகும். இத்துறையானது இந்திய பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்த கூடியது. 2014 ல் இருந்து 2016 வரையிலான மூன்று தொடர்ச்சியான ஆண்டுகளில் இந்தியா 3-வது மிகப்பெரிய உற்பத்தியாளராக மாறியுள்ளது. இரும்பு மற்றும் எஃகு தொழில் உலகமயமாக்கலின் மையமாக உள்ளது மற்றும் வெவ்வேறு தொழிற்துறையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்புகளை கொண்டுள்ளது. இந்த உலோகங்கள் கட்டுமானத்திலும், வாகன போக்குவரத்திலும், மின்னணு சாதனங்களிலும் மற்றும் ரோபோக்களை உருவாக்கவும் பயன்படுத்தப்படுகின்றது. இது எஃகு தொழிற்துறையை ஒரு மிக முக்கியமான மற்றும் சிறப்புமிக்கதாக ஆக்குகிறது.

வரலாற்று மற்றும் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி BCE 1600-களின் ஆரம்பத்தில் இருந்தே உலோகங்களைப் பயன்படுத்துவதில் இந்தியா முதல் நாடாக இருந்தது, இருப்பினும் இரும்பு மற்றும் எஃகு தொழில் 1907 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் நிறுவப்படவில்லை.

இரும்பு மற்றும் எஃகு ஆலைகளை நிறுவுவதற்கான முயற்சிகள் 1800 ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. 1808 ஆம் ஆண்டு கிழக்கு இந்திய கம்பெனியின் திரு.டங்கன் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட முதல் முயற்சியும் விரைவில் முடிவுக்கு வந்தது. 1830 ஆம் ஆண்டில், ஜோசியா மார்ஷல் ஹுத் முயற்சியால் முதல் அயர்ன் & ஸ்டீல் ஆலை போர்டோ நோவா, சென்னையில் நிறுவப்பட்டது. எனினும், இவ்வாலை வெற்றிபெற முடியவில்லை என்பதால் 1860-ல் மூடப்பட்டது.

1870 ஆம் ஆண்டில் குல்தியின் காடுகளில் ஜேம்ஸ் ஏர்ஸ்கின் ஒரு சிறிய இரும்பு உலையை துவக்கினார். இரும்பு உற்பத்தி செய்வதற்கு பெங்கால் அயர்ன் வொர்க் கம்பெனி என்ற பெயரில் துவங்கப்பட்டது. அது பின்னர் புர்ராகர் இரும்பு வொர்க் என்று பெயர் மாற்றப்பட்டது. இந்த நிறுவனம் அதன் மோசமான தரம் குறைந்த இரும்பு உற்பத்தியின் காரணமாக அரசாங்கத்தின் ஆதரவை பெற தவறிவிட்டது. இதனால் இந்த நிறுவனம் 8 ஆண்டுகள் மூடப்பட்டது. பிறகு பெங்கால் அயர்ன் & ஸ்டீல் கம்பெனி இந்த நிறுவனத்தை வாங்கி மீண்டும் திறந்தது.

ஏறக்குறைய 50,000 டன் பிக் இரும்பை (Pig iron) ஆண்டு தோறும் உற்பத்தி செய்திருந்தாலும் இந்நிறுவனம் பயன்படுத்திய தாது மிகவும் தரம் குறைவாக இருந்ததால் இரும்பு உற்பத்தியில் இலாபம் ஈட்ட முடியவில்லை. இருப்பினும் 1910 ஆம் ஆண்டில், இந்நிறுவனம் சிறந்த தரமான இரும்புத் தாதுவை பயன்படுத்த ஆரம்பித்தது, 1926 ஆம் ஆண்டில் அந்நிறுவனம் பெங்கால் அயன் கம்பெனி லிமிடெட் என்று தனது பெயரை மாற்றிக்கொண்டது.

நவீனகால டாட்டா ஸ்டீல் 1907 ஆம் ஆண்டு ஜாம்ஷெட்பூரில் ஜம்சேட்ஜி நுஸ்வரன்ஜி டாட்டாவால் நிறுவப்பட்டது. ஜாம்ஷெட்பூரில் டாடா 1939 ஆம் ஆண்டில் முழு பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் மிகப்பெரிய எஃகு ஆலையாக TISCO செயல்பட்டது. இந்த நிறுவனம் இன்றைய உலகின் 7வது மிகப்பெரிய இரும்பு உற்பத்தியாளராகவும், இந்தியாவில் மிகப்பெரிய எஃகு மற்றும் இரும்பு உற்பத்தியாளராகவும் உள்ளது.






IISCO ஆலை 1919 ஆம் ஆண்டில் பர்ன்பூரில் நிறுவப்பட்டது. 1930–ஆம் ஆண்டில் பெங்கால் அயன் நிறுவனம் IISCO உடன் இணைக்கப்பட்டது, அரசு நிறுவனமான இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் (HSL) கம்பெனி, 1950–இல் மூன்று ஆலைகளை அமைத்தது. இந்த நிறுவனம் முன்னாள் பாரத பிரதம மந்திரி ஜவஹர்லால் நேருவின் முயற்சியால் கொண்டுவரப்பட்டது.

சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா ஸ்டீல் துறையில் ஒரு அற்புதமான வளர்ச்சி பெற்றது. 1950 முதல் 1951 வரை இந்தியா 16.9 லட்சம் டன் அளவில் பிக் இரும்பு தயாரித்தது. முதல் திட்டத்தின் போது, இரும்பு & ஸ்டீல் இந்தியா, TISCO மற்றும் IISCO ஆகிய கம்பெனிகள் மூன்றும் முக்கிய தனியார் நிறுவனங்களாகவும், மைசூர் ஸ்டேட் இரும்பு மற்றும் ஸ்டீல் வொர்க்ஸ் ஆகிய நிறுவனங்கள் பொதுத் துறை நிறுவனமாகவும் இருந்தது.

ஸ்டீல் அத்தாரிடி ஆஃப் இந்தியா லிமிடெட் (SAIL) 1973 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்தியாவில் பிலாய், பொகரா, ரூர்கேலா மற்றும் பர்ன்பூர் போன்ற அனைத்து பெரிய ஸ்டீல் தொழிற்சாலைகள் அனைத்தும் இந்திய அரசால் நிர்வகிக்கப்படுகின்றது. இந்நிறுவனம் 1976 முதல் அயர்ன் & ஸ்டீலை நிர்வகிக்க ஆரம்பித்தது.

மகாராஷ்டிரா எலக்ட்ரோஸ்மெல்ட் லிமிடெட் மற்றும் விஸ்வேஸ்வரயா அயர்ன் & ஸ்டீல் நிறுவனத்தை 1986 ஆம் ஆண்டு மற்றும் 1989–ஆம் ஆண்டுகளில் (SAIL) – ஆல் நிர்வகிக்கப்பட்டது. 1991–ஆம் ஆண்டில் தாராளமயமாக்கப்பட்ட தொழில்துறை காரணமாக சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. இக்காலக்கட்டத்தில் (SAIL) புதிய தொழிற்நுட்பங்கள் கூடிய நிறுவனமாக மாறியது. 1950–களில் 16 மில்லியன் பிக் இரும்பை உற்பத்தி செய்த இந்தியா படிப்படியாக உயர்ந்து 1990–களில் 14 மில்லியன் டன் இரும்பு கம்பிகளை தயாரித்தது மற்றும் 2000மாவது வருடத்தில் 26 மில்லியன் டன் இரும்பு கம்பிகளை உற்பத்தி செய்தது. தற்போது (2020) 100 மில்லியன் டன்களை கடந்து உற்பத்தி செய்து வருகின்றது.

தற்போது உலகளவில் 8வது மிகப்பெரிய கம்பி உற்பத்தியாளராக இந்தியா திகழ்கிறது. இந்திய ஸ்டீல் தொழில்துறையின் வளர்ச்சியினைப் பொறுத்து தரவரிசையில் இந்த ரேங்க் கணிக்கப்பட்டுள்ளது. உலகின் முன்னணி கம்பி உற்பத்தியாளர்களில் ஒருவராக விரைவில் இந்தியாவை நாம் எதிர்பார்க்கலாம்.

**அம்மன்-TRY ன் பங்களிப்பு :**

1978 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட அம்மன் ஸ்டீல் குழுமம் கடந்த 42 ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை பெற்றுள்ளது. தற்போது தென் இந்தியாவில் முன்னணி எஃகு உற்பத்தியார்களில் ஒன்றாக உள்ளது. அம்மன் ஸ்டீல் கார்ப்பரேஷன் ஆரம்பத்தில் மூலப்பொருளின் சில்லறை மற்றும் வர்த்தக அமைப்பாக இருந்து வந்தது. அம்மன் ஸ்டீல் நிறுவனம் குறுகிய காலக்கட்டத்தில் தென்னிந்தியாவிலேயே மிகப்பெரிய ஒருங்கிணைந்த எஃகு ஆலையாக விரிவடைந்த தனியார் நிறுவனம் ஆகும். மற்றும் தமிழகத்தில் இரண்டு ரோலிங் மில் ஆலையும், ஆந்திராவில் ஒரு இரும்பு உருக்கு தொழிற்சாலையும் அமைந்துள்ளது. மேலும் மிகப்பெரிய மற்றும் மிகவும் சிறந்த நிறுவனங்களில் ஒன்றாக உள்ளது. தென்தமிழகத்தில் உள்ள திருச்சிராப்பள்ளியை தனது தலைமையிடமாகக் கொண்டுள்ளது.

அம்மன் ஸ்டீல் நிறுவனம் பல்வேறு கம்பிகளை உற்பத்தி செய்து வணிகத்தில் ஈடுபட்டுள்ளது. 1999 முதல் முறுக்கு கம்பிகள் TMT கம்பிகள் மற்றும் CRS கம்பிகளை 6mm ல் இருந்து 25mm வரை தயாரிக்கப்படுகின்றது. இந்த கம்பி தயாரிப்பில் கட்டிடம் மற்றும் பிற கட்டுமான வேலைகளுக்கும் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. **அம்மன்**-TRY நிறுவனம் எப்போதும் கம்பிகளின் உற்பத்தி தொழிற்துறையில் ஒரு முன்னோடியாக இருக்கிறது. கம்பிகளில் புதிய தொழிற்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, 2007 ஆம் ஆண்டு **அம்மன்**-TRY நிறுவனம் CRS கம்பிகளை தயாரிக்கத் தொடங்கி, தமிழ்நாட்டில் முக்கிய கம்பி உற்பத்தியாளராக உள்ளது.

# “பொதுவான கட்டுமான உதவிக்குறிப்புகள்”





கம்பியின் வெளிப்புறத்தில் காணப்படும்
நிறத்தை வைத்து
தரத்தை கண்டறியலாம்.




கம்பிகளை ISI ஆல் அங்கீகரிக்கப்பட்ட
பரிசோதனை கூடத்தில் பரிசோதனை செய்து
தரத்தை கண்டறியலாம்.




கம்பிகளை வெட்டும்போது வெட்டப்பட்ட
பகுதியில் காணப்படும் நிறத்தை வைத்து
தரத்தை கண்டறியலாம்.



Acid Etching Test
செய்து தரத்தை கண்டறியலாம்.



கம்பியை ISI முறையில்
U வடிவில் வளைத்து அந்த வளைவில்
வெடிப்பு, கிளிவு ஏதும் இல்லாமல் இருப்பதை
வைத்து கம்பியின் தரத்தை கண்டறியலாம்.



கம்பிகளை தட்டும்போது கம்பியில் இருந்து
வெளிவரும் சப்தத்தை வைத்து
தரத்தை கண்டறியலாம்.

*மேலே குறிப்பிட்ட சோதனைகளை நன்கு அனுபவம் உள்ளவர்களை கொண்டு மட்டுமே சோதனை செய்ய வேண்டும்.

**AMMAN-TRY**
TMT BARS
வழங்கும்

IS : 2830 IS : 1786

# அனைத்து வாடிக்கையாளர்களுக்கான

## பம்பர் பரிசுத்திட்டம்



**சிறப்பு சலுகை**

வாருங்கள்!
வாங்குங்கள்!!

அனைவருக்குமான
**அற்புத திட்டம்**

**ஆச்சரியமூட்டும் சலுகைகள் விழிகளை வியக்கவைக்கும் பொருட்கள்**

தாங்கள் வாங்கும் அளவிற்கு ஏற்ப
கீழ்கண்ட பரிசுகளை
பெற்றுச் செல்லுங்கள்.

| டன் | பரிசு |
|---|---|
| 5 டன் | 20gm வெள்ளி நாணயம் |
| 10 டன் | மிக்ஸி மற்றும் ஜார் |
| 15 டன் | 1gm தங்க நாணயம் |
| 20 டன் | ஸ்மார்ட் போன் |
| 50 டன் | 32"(inch) டிவி |
| 75 டன் | லேப்டாப் |
| 100 டன் | சுற்றுலா |
| 25 டன் | ஹோம் தியேட்டர் |

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்களிடம் வாங்கும் கம்பிகளுக்கு மட்டுமே பரிசுப் பொருள் வழங்கப்படும்.

இச்சலுகை **01.05.2020** முதல் **31.10.2020** வரை*

தாங்கள் வாங்கிய **AMMAN-TRY** கம்பிகளின் **Bill** விவரங்களை கீழ்கண்ட அலைபேசி **(whatsapp)** எண்ணிற்கு அனுப்பி வைக்கவும்.
குறிப்பட்ட இலக்கை தாங்கள் அடைந்த பின்னர், தங்களுக்குரிய பரிசுப் பொருள் குறிப்பிட்ட காலகெடுவுக்குள் வழங்கப்படும்.
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய **அலைபேசி எண்: 93449 02020**




புதிய முயற்சிகளின் முன்னோடியான **AMMAN-TRY-** ன் இந்த முயற்சிக்கும்,
நீங்கள் ஆதரவு தருவீர்கள் என்று நம்புகிறோம்.
இம்முயற்சிக்கான கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளையும்
எங்களுக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

AMMAN-TRY
TMT BARS

**ஸ்ரீ அம்மன் ஸ்டீல் & அலாய்டு இண்டஸ்ட்ரீஸ் (பி) லிட், திருச்சி-20.**

For Enquiries Contact: (+91) 75 50 30 12 34
info@ammantry.com
**www.ammantry.com**



**Follow us on**